**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 72/2020 |
| Name | : Durkkaiyammal |
| P.W. | : 1 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.07.2025

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் கணியூர் ஆஸ்பத்திரி மேடு எம்.ஜி.ஆர் நகரில் வசித்து வருகிறேன். கூலி வேலை செய்கிறேன். எனது கணவர் வேடபட்டி ரைஸ் மில்லில் கூலி வேலை செய்து வந்தார். சுமார் 6 வருடங்களுக்கு முன்பு இரவு 07.00 மணியளவில் மட்டை மில்லிற்கு கிழபுறமாக ஆடு, மாடு மேய்த்துக்கொண்டிருந்தேன் அப்போது அங்கு வந்த எனது கணவரும் நானும் ஆடு, மாட்டை ஓட்டிக்கொண்டு வீட்டிற்கு சென்று கொண்டிருந்த போது ஆஸ்பத்திரி மேடு அருகில் தெற்கிலிருந்து வடக்கு வந்த இருசக்கர வாகனம் மோதி எனது கணவருக்கு தலை மற்றும் காலில் காயம் ஏற்பட்டது. ஆஜர் எதிரி தான் அன்று இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்தார். எனது கணவரை உடுமலை அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் மூலமாக அழைத்துச் சென்றோம் அங்கிருந்து கோவை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். மருத்துவர் எனது கணவர் இறந்துவிட்டதாக சொன்னார். மறு நாள் காலை போலீசார் வந்து விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவு செய்தார்கள். நான் போலீசாரிடம் நடந்ததை சொன்னேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கைரேகை என்னுடையதுதான். **புகார்**

**வாக்குமூலத்தில் உள்ள கைரேகை அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. அன்றைய தினமே பிரேத பரிசோதனை செய்யப்பட்டது. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

Sd/-Thiru.M.Dheenadhayalan, B.A., B.L.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்

மடத்துக்குளம்